இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவிபுரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்கவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 8

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்மாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லை. ஆகவே, தள்ளப்படுகிறது.

(4) அமைச்சரின் அறிக்கைகள்.

(அ) 9—1—78-ம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ (1) விதியின்கீழ் ஓர் அறிக்கை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ(1) விதியின்கீழ் அவைக்கு ஓர் அறிக்கை அளிக்கின்றேன்.

9—1—1978 அன்று சட்டமன்ற குறுகிய கால வினா எண். 1 விடையளிக்கப்பட்டது. அப்போது உறுப்பினர் திரு. கிட்டப்பா வினால் எழுப்பப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் ஊராட்சி ஒன்றிய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கடந்த 29-ம் தேதி டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதே போல், நகராட்சி மன்றங்களுக்கும் இப்படி ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் 31-ம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு ஆணை 29—12—1977-ல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அது நிறுத்தி வைக்கப்பட்டு திருத்தப்பெற்ற ஆணையாக 8—2—1978-ல் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(5) கவன ஈர்ப்பு.

முதுகுளத்தூர் தாலூகா, சாயல்குடி கிராமம், காந்திநகர், வி. வி. ஆர் காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்பு. அறிவிப்பு கொடுத்த திரு. சோ. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு, ஆர். சி. சுப்பிரமணியம்,

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ‘‘முதுகுளத்தூர் தாலூகா, சாயல்குடி கிராமத்தைச் சேர்ந்த காந்தி நகர், வி.வி.ஆர். காலனியில் 26—2—1978 பகல் நேரத்தில் 100-க்கு மேற்பட்ட வீடுகள் தீப்பற்றி நாசமாகியதன் காரணமாக ரூபாய் 2 இலட்சம் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளது. அத்தனை பேர்களும் பனைமரத் தொழிலாளிகள் அவர்கள் வீடு இழந்து, உடைமைகள் அனைத்தும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்ற நிலை குறித்து ’ மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சாயல்குடி கிராமத்தில் வி.வி.ஆர். காலனியில் 26—2—1978-ம் தேதி, பிற்பகல் சுமார் 1-45 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் 64 கூரை வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. முதுகுளத்தூர் வட்டாட்சியர் தீ விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டது என்றும், உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், பொருள் சேதத்தின் மதிப்பு ரூ. 19,170 இருக்கும் என்றும் அறிக்கை அனுப்பியுள்ளார். கால்நடைகள் சேதம் எதுவும் இல்லை. பரமக்குடியிலிருந்து தீயணைப்புப் படையினர் 26—2—1978-ம் தேதி பிற்பகல் 3-15 மணிக்கு வந்து தீயை அணைத்தார்கள்.

தீ விபத்தினால் வீடுகளை இழந்த 150 பேர்களும், மேற்படி ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திலும், பக்கத்திலுள்ள வீடுகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் பனையேறிகள். அவர்களுக்கு உணவுப் பொட்டலங்க்ள் உடனடியாக வழங்கப்பட்டன. நிலைமை அமைதியாக உள்ளது, ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 வீதம் ஆக ரூ. 5,120 உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய வீடுகளைத் திரும்பக் கட்ட விரைவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, 26—2—1978 அன்று சாயல்குடியில் 64 வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. அந்தப் பகுதியில் தீயணைப்புப் படை, கிட்டத்தட்ட 30 மைலுக்கு அப்பாலிருக்கிறது. அங்கு தகவல் அனுப்பி, அவர்கள் தர்மதமாக வந்த காரணத்தாலே, அந்தத் தீயை அணைக்க

முடியாமல் போய்விட்டது. அந்தச் சூழ்நிலையில் 64 வீடுகள் எரிந்த நிலையில், அந்தப் பனைமரத் தொழிலாளர்கள் வீடற்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கக்கூடிய இடமானது, சாயல்குடி பனைமரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான இடம். அவர்கள் அதை கிட்டத்தட்ட 7 வருடத்திற்கு முன்பு ரூ. 2,000-க்கு வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு 3 சென்ட் இடம், ரூ. 400 கொடுத்தால்தான் தரப்படும் என்று தொழிலாளர்களை வற்புறுத்துகிறார்கள். வீடு கட்டுவதற்கு ரூ. 400 கொடுத்து, நிலம் வாங்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, அந்த ஏழை ஜனங்களுடைய நன்மையைக் கருதி, நியாயமான விலையில் அந்த வீட்டு நிலங்களை அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-40].

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சி. சுப்பிரமணியம் அவர்கள் தனது கருத்தைத் தெளிவாக எனக்கு எழுதி மனுவாகத் தருவார்களானால், அது குறித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது பற்றி இந்த அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"மானியக் கோரிக்கை எண் 10—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 84,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அதிகமான பால் உற்பத்தி சங்கங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 84,68,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.